

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2026) சென்னை, விக்டோரியா பொது அரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில், நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்று 2025ஆம் ஆண்டிற்கான அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற ரேஷ்மா அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, என்.கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், 18.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் முமகேஷ்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், 9.67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை திறந்துவைத்து, பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், 8.14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி அச்சகத்தை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.51.01 கோடியில் பல்நோக்கு மையம்– சமுதாயக் கூடங்கள் – முதல்வர் படைப்பகத்திற்கு அடிக்கல்!

# ரூ. 179.04 கோடியில் முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள் - முதல்வர் திருமண மாளிகை - மாநகராட்சி அச்சகம் - முதல்வர் விளையாட்டுத் திடல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 13-**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில் ரூ.179.04 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள "முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்", "முதல்வர் திருமண மாளிகை", "மாநகராட்சி அச்சகம்" , "முதல்வர் விளையாட்டுத் திடல்", "இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம்" மற்றும் பெருங்களத்தூரில் ரூ.4.73 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் பூங்கா மற்றும் நல்ல தண்ணீர் குளம் ஆகியவற்றை திறந்து வைத்து,**

ரூ. 51.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1 பல்நோக்கு மையம், 3 சமுதாய நலக்கூடங்கள், முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.03.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 133 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 700 அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட "முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்", 18.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முதல்வர் திருமண மாளிகை", 8.14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "மாநகராட்சி அச்சகம்", 9.81 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முதல்வர் விளையாட்டுத் திடல்", 9.67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம்", பெருங்களத்தூரில் 4.73 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் பூங்கா மற்றும் நல்ல தண்ணீர் குளம் ஆகிய முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். மேலும், வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில் உள்ள முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு வளாகத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய பல்நோக்கு மையம், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் 14.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம், வியாசர்பாடி, கக்கன்ஜி நகரில் 10.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம், தண்டையார்பேட்டையில் 16.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம், வெங்கடாபுரம், தெற்கு பூங்கா தெருவில் அமைந்துள்ள முழுநேர கிளை நூலகத்தில் 6.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் ஆகிய 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெரு-நகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 133 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் 2,99,570 சதுர அடி கட்டடப் பரப்பளவில் இரண்டு தொகுதிகளாக (பிளாக் A மற்றும் பிளாக் B) 700 குடியிருப்புகள் கொண்ட முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

**700 அடுக்குமாடி குடியிருப்புகளை கொண்ட "முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு" பிளாக் Aவில் 390 வீடுகளும், பிளாக் B வில் 310 வீடுகளும், மாற்றுத்திறனாளிகளுக்காக பிளாக் A வில் 23 வீடுகள், பிளாக் Bவில் 12 வீடுகள் என மாற்றுத்திறனாளிகளுக்காக 35 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.**

"முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளில்" உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 415 சதுர அடி பரப்பளவில் சமையலறை, கூடம், படுக்கைஅறை, கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதோடு மாற்றுத்திறனாளிகளுக்கென 35 குடியிருப்புகளும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்குடியிருப்பு வளாகத்தில் 770 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனம் நிறுத்தும் வசதிகள், 8 எண்ணிக்கையிலான மின் தூக்கி வசதிகள், 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, 20 எண்ணிக்கையிலான 1,350 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், 2022 சதுர மீட்டர் பரப்பளவில் புல்வெளி வசதிகள், 1381 சதுர மீட்ட பரப்பளவில் திறந்தவெளி இடம், 824 சதுர மீட்டர் பரப்பளவில் வணிகப் பகுதி மற்றும் 2,237 சதுர மீட்டர் பரப்பளவில் சாலை பகுதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 10 பயனாளிகளுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். ஒதுக்கீட்டு ஆணைகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

முதல்வர் திருமண மாளிகையானது 23,600 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கீழ்தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளங்களுடன், 648 நபர்கள் அமரும் வகையில் 18.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இத்திருமண மாளிகையில் ஒரே சமயத்தில் 216 நபர்கள் உணவருந்தும் வசதி, 3 விருந்தினர் அறைகள், மணமகன் மற்றும் மணமகள் அறை, 2 மின்தூக்கி வசதிகள், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதிகள், கழிவுநீர் தொட்டி, மேல்நிலை குடிநீர் தொட்டிகள், நவீன கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

**முதல்வர் திருமண மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 10 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.**

மாநகராட்சி அச்சகமானது 9,027 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் 8.14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் அச்சகமும், சேமிப்பு அறை வசதிகள், அலுவலக அறை, DTP பிரிவு, நிலத்தடி தண்ணீர் சேமிப்பு தொட்டி, மின்தூக்கி வசதிகள், இரு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

முதல்வர் விளையாட்டுத் திடலானது, 89,298 சதுர அடி பரப்பளவில் 9.81 கோடி ரூபாய் செலவில் பேட்மின்டன், குத்துச்சண்டை, கூடைப்பந்து, வாலிபால் மற்றும் கால்பந்து மைதானங்கள், விளையாட்டு பகுதி, யோகா பகுதி, நிர்வாகக் கட்டடம், கழிப்பறை வசதிகள், பசுமை பகுதி, அமர்விடங்களுடன் மையத் திறந்தவெளி பகுதி, நிலத்தடி தண்ணீர் சேமிப்பு தொட்டி, இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையமானது 16,770 சதுர அடி நிலப்பரப்பளவில் 16,045 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் 9.67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடத்தின் தரை தளத்தில், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகள், மின்தூக்கி வசதிகள், மின்சார அறை மற்றும் நவீன கழிப்பறை வசதி, முதல் தளத்தில் வரவேற்பு அறை, பிசியோதெரபி சிகிச்சைப் பிரிவு, சாய்வுதளம் மற்றும் படிகட்டுகள், எடையற்ற இயக்கம், நடைபயிற்சி அறை, SWD & இழுவை, மின் தூண்டுதல், Tens & IFT சிகிச்சை, அல்ட்ராசவுண்ட் சிகிச்சை, லேசர் சிகிச்சை, நடைபயிற்சி (இணைப் பட்டை), மின்சார அறை மற்றும் நவீன கழிப்பறை வசதிகள் இரண்டாவது தளத்தில், ஆலோசனை அறைகள், நடைபயிற்சி அறை, உபகரணங்கள் அறை, அளவீட்டு அறை, மின் விநியோக அறை, பட்டறை அறை, சேமிப்பு அறை, செயற்கை மூட்டு பகுதி, காத்திருக்கும் பகுதி, மூன்றாம் தளத்தில், பணியாளர் அறை, ஆய்வகம், பணியாளர்கள் உணவு அருந்தும் இடம், உபகரண சேவை அறை, நோயாளிகள் காத்திருப்பு அறை, உணவு மற்றும் நுகர்பொருட்கள் கடை, மின்சார அறை, நான்காம் தளத்தில் 15 படுக்கைகள் கொண்ட டயாலிசிஸ் அறை, அமில பைகார்ப் கலவை பகுதி, மறுசுழற்சி பகுதி, மின்சார அறை மற்றும் நவீன கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

**டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் பூங்கா மற்றும் நல்ல தண்ணீர் குளம் திறந்து வைத்தல்**

முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருங்களத்தூரில் 4.73 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் பூங்கா மற்றும் நல்ல தண்ணீர் குளத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்பூங்காவானது, நடைபாதை, கூழாங்கற்கல் நடைபாதை, சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், கண்காணிப்பு கேமராக்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வால்டாக்ஸ் சாலை முதல்வர் நகர்ப்புற குடியிருப்பு வளாகத்தில் கட்டப்படவுள்ள புதிய பல்நோக்கு மையம்;

பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் 14.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம், வியாசர்பாடி, கக்கன்ஜி நகரில் 10.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம், தண்டையார்பேட்டையில் 16.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் மற்றும் வெங்கடாபுரம், தெற்கு பூங்கா தெருவில் அமைந்துள்ள முழுநேர கிளை நூலகத்தில் 6.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்;

என மொத்தம் 51 கோடியே 01 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் புதிய டைடல் நியோ பூங்கா அமைப்பதற்கு

# தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் - எம்.எம்.அப்துல்லா - டாக்டர் வை.முத்துராஜா - எம்.சின்னத்துரை பங்கேற்பு!

புதுக்கோட்டை, மார்ச் 13-

முதலமைச்சர் அவர்கள் 11.03.2026 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி வாயிலாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கரூர் மாவட்டம், இனாம் கரூரில் ரூ.38.50 கோடி மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை கிராமத்தில் ரூ.36.78 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரத்தில் ரூ.43.78 கோடி மதிப்பீட்டிலும் மூன்று புதிய டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை ஊராட்சி, சிப்காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில்துறை வளர்ச்சியை மாவட்டங்களுக்குத் தாழ்வில்லாமல் கொண்டு செல்லும் பல்வேறு முன்னோடியான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை கிராமத்தில் ரூ.36.78 கோடி மதிப்பீட்டில் டைடல் நியோ பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படுவது மாவட்ட வளர்ச்சிக்கான முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

2000ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

"அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி" என்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதிய டைடல் பூங்காக்கள் அமைக்க முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், பட்டாபிராம் டைடல் பூங்கா முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஒசூரில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. வை. முத்துராஜா எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் (புதுக்கோட்டை), எம்.எம்.அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் ஹெ.மை. குழந்தைச்சாமி , உதவி பொறியாளர் கோபி கார்த்தி, புதுக்கோட்டை வட்டாட்சியர் செந்தில் குமார், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை மற்றும் வே.ராஜேஷ், மு.க.ராம கிருஷ்ணன், க.மதியழகன், எஸ். எஸ்.கருப்பையா, காதர்கனி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.03.2026) தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி வாயிலாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கரூர் மாவட்டம், இனாம் கரூரில் ரூ.38.50 கோடி மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை கிராமத்தில் ரூ.36.78 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரத்தில் ரூ.43.78 கோடி மதிப்பீட்டிலும் மூன்று புதிய டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை ஊராட்சி, சிப்காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டார். உடன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக் கோட்டை), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் ஹெ.மை.குழந்தைச்சாமி , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , உதவி பொறியாளர் கோபி கார்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், கொடுவாய் ஆர்.வி.எஸ். திருமண மண்டபத்தில் திருப்பூர் மாவட்ட இலக்கு 2030 புத்தகத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வெளியிட்டனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், பொறுப்பாளர் எஸ்.சிவபிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.